# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093885

1. District : திருச்சி PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை Year: 2019 FIR No.: 08 Date: 17.07.2019
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Cr.P.C Sections பிரிவுகள்: 102 and
(ii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7, 7(A)
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 15.07.2019 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 17.07.2019 Time : 09.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 11 கி.மீ வடமேற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : உறையூர், சார்பதிவாளர் அலுவலகம், [illegible] நகர், [illegible], திருச்சி
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. வெ. பாலு (b) Father's/ Husband's Name : ரா. பரியண்ணன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 1962 (d) Nationality : இந்தியன் (e) Passport No : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : ஆய்வகத்துறை ஆய்வாளர் (g) Address : மாவட்ட ஆய்வகத்துறை அலுவலகம், திருச்சி
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
எதிரிகள் பற்றி காலம் - 12ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
- தாமதம் இல்லை -

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

காலம் 7ல் கண்ட எதிரிகளின் பெயர்கள்

1) த.லிங்கேஸ்வரன், வயது.47/2019, த/பெ.தனபால், சார்பதிவாளர் (மாவட்ட பதிவாளர் நிலை), உறையூர் சார்பதிவாளர் அலுவலகம், திருச்சி.
2) ம.சிவராசு, வயது–53/2019, த/பெ.மருஇளநிலை உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், உறையூர், திருச்சி.
3) அ.ஐயப்பன் வயது–24/2019, த/பெ.அண்ணாவி, 2/39, ஆர்ச்சம்பட்டி, குளித்தலை தாலுக்கா, கரூர் மாவட்டம்.
4) ரா.விக்னேஷ் வயது–27/2019, த/பெ.ராஜா, 5/17, வெள்ளாளர் தெரு, முத்தரசநல்லூர், திருச்சி மாவட்டம்.
5) வே.விக்னேஷ் வயது–21/2019, த/பெ.வேணுகோபால், 40/5, கீழபடையாச்சி தெரு, பாலக்கரை, திருச்சி.
6) கா.ரமேஷ் வயது–40/2019, த/பெ.காத்தான், 1/17, அக்ரஹாரம், குழுமணி, திருச்சி மாவட்டம்.
7) க.செந்தில்குமார் வயது–43/2019, த/பெ.கருப்பையா, மேலத்தெரு, பாதரக்குடி, பூதலூர் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்.
8) ஜெ.கார்த்திக் வயது–35/2019, த/பெ.ஜெகதீசன், 82A, கீழ அடையவலஞ்சான் வீதி, ஸ்ரீரங்கம், திருச்சி.

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

17.7.19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
17.7.19

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M. நகேந்திர சோழன்
Rank: நிலை ஆய்வாளர் No. எண் ..........
ஊ.த.பு. பிரிவு,
திருச்சிராப்பள்ளி

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண். 08/2019—ன் முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி.......

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் 17.07.2019ஆம் தேதி காலை 09.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திரு.பெ.பாலு, ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சி என்பவர் நிலையம் ஆஜராகி, 15.07.2019ம் தேதி திருச்சி மாவட்டம், உறையூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை செய்தபோது தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறையின் (மகஜர்) மீது நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். மேற்படி அவர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் மற்றும் திடீர் சோதனை செயல்முறை விபரங்கள் பின்வருமாறு: அனுப்புநர் பெ.பாலு, வயது 57/2019, த/பெ.பெரியண்ணன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சி. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சிராப்பள்ளி. அய்யா, பொருள்: திருச்சி உறையூர் சார்பதிவாளர் அலுவலக திடீர் சோதனை மேற்கொண்டது மேல் நடவடிக்கை எடுக்க வேண்டி.... திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் 15.07.2019ஆம் தேதி, மாலை சுமார் 17.00 மணியளவில் திருச்சி, ஊ.த.க பிரிவு அலுகலத்திலிருந்து, திருச்சி ஊ.த.க பிரிவு காவல் ஆய்வாளர் திரு.ம.நவநீதகிருஷ்ணன் மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் அலுவல் சாட்சி திரு.க.மாறன், வருவாய் ஆய்வாளர் (தெற்கு பகுதி), வட்டாட்சியர் அலுவலகம், திருச்சி மேற்கு, திருச்சிராப்பள்ளி ஆகியோருடன் புறப்பட்டு, திருச்சி மாவட்டம், லால்குடி சார்பதிவளார் அலுகலத்தில் மாலை சுமார் 17.30 மணிக்கு திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது, மேற்கண்ட சோதனையின் போது ரூ.1,22,400/—ஐ கைப்பற்றப்பட்டு, திடீர் சோதனை செயல்முறைகள் (மகஜர்) 19.00 மணி முதல் 22.00 மணிவரை தயார் செய்யப்பட்டது. மேற்படி திடீர் சோதனை செயல்முறைகளின்படி (மகஜர்) நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் 15.07.2019ஆம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் (மகஜர்) இணைக்கப்பட்டுள்ளது. தங்கள் உண்மையுள்ள Sd.xxxx 17.07.2019 (P.BALU), Submitted to the Court of the Hon'ble Special Judge for the trial cases of the PC Act-1988. Trichy. Received this report at 09.00 hours on 17.07.19 and registered a case in Trichy V&AC Cr.No.08/2019 u/s 102 Cr.P.C and 7, 7(A) of the Prevention of Corruption (Amendment) Act 2018 at 10.00 hrs on 17.07.2019.(Sd) M.Navaneethakrishnan, 17.07.2019 (M.NAVANEETHAKRISHNAN) Inspector of Police, V&AC, Trichy. திடீர் சோதனை செயல்முறை (மகஜர்) இன்று 15.07.2019 மாலை 19.00 மணிக்கு திருச்சி மாவட்டம், திருச்சி—குழுமணி செல்லும் சாலையில் மருதாண்டாக்குறிச்சி, தாமரை நகரில் அமைந்துள்ள உறையூர் சார்பதிவாளர் அலுவலகத்தை, (1)திரு.பெ.பாலு, த/பெ.பெரியண்ணன், மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சி மற்றும் (2)திரு.க.மாறன், த/பெ.கருப்பையா, வருவாய் ஆய்வாளர் (தெற்கு பகுதி), வட்டாட்சியர் அலுவலகம், திருச்சி மேற்கு, திரு.ம.நவநீதகிருஷ்ணன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சி மற்றும் அவர்களது குழுவினர் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் சோதனையின் செயல்முறை நடவடிக்கைகள் பொருத்து மடிக்கணினி மூலம் தயார் செய்யப்படும் திடீர் சோதனை செயல்முறைகள். திருச்சி மாவட்டம், மருதாண்டாக்குறிச்சியில், தாமரை நகரில் உள்ள உறையூர்

சார்பதிவகத்தில் பதிவு உள்ளிட்ட ஏனைய அரசு அலுவல்களை செய்து கொடுக்க மேற்படி சார்பதிவக பணியாளர்கள், நேரிடையாகவும், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாகவும் கையூட்டு கேட்டுப்பெறுவதாக கிடைத்த தகவலின் பேரில், இன்று 15.07.2019 மாலை சுமார் 17.30 மணிக்கு கூஷ அலுவலர்கள் கூஷ சார்பதிவக அலுவலகத்தை முன்னறிவிப்பின்றி திடீர் சோதனை செய்வதற்கு, சார்பதிவக அலுவலக முன்பக்க கேட் வழியாக உள்ளே நுழைந்ததும் கூஷ சார்பதிவகத்தை சுற்றி நான்கு திசைகளிலும் காவலர்களை பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டது. மேற்படி சார்பதிவக அலுவலக கட்டிடம் வடக்கு பார்த்தார்போல் அமைந்துள்ள அரசு கட்டிடமாகும். சார்பதிவகத்தின் உள்ளே நுழைந்ததும் முன்பகுதியில் பத்திரம் பதிவு செய்ய வந்துள்ள பொதுமக்கள், அந்த அறையில் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் அமர்ந்திருந்தனர், அதனை அடுத்து, கிழக்கு பக்கம் உள்ளே நுழைவாயிலின் இடது புறம் கண்ணாடியால் அடைக்கப்பட்டிருந்த கணிணி அறையில் தொகுப்பூதிய பணியாளர்கள் அமர்ந்திருந்தனர், அதற்கு தெற்கு பக்கம் மேடையில் வடக்கு நோக்கி சார்பதிவாளர் டேபிள் சேர் போட்டு ஆவணங்களில் ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். மேலும் சார்பதிவாளருக்கு கிழக்கு பக்கம் ஒரு நபர் கணிணியை இயக்கி கொண்டிருந்தார். அந்த நபருக்கு வடக்கே மற்றொரு நபர் புகைப்படம் எடுக்கும் பணி செய்து கொண்டிருந்தார். சார்பதிவாளருக்கு மேற்கு பக்கம் ஐந்து, ஆறு நபர்கள் அவரைச்சுற்றி நின்றுகொண்டிருந்தனர். மேலும், சார்பதிவாளருக்கு பின்புறம், நான்கு பெண் அலுவலர்கள் கணிணியை இயக்கி கொண்டிருந்தனர். அதற்கு மேற்கே கழிவறை அமைந்துள்ளது. அதற்கு வடக்கே முதலாவதாக உள்ள அறையில் உதவியாளர் இருக்கையும், இரண்டாவதாக உள்ள அறை அலுவலக பணியாளர்கள் உணவு அருந்துமிடமும், அதில் சில பைகளும் இருந்தன. கணிணி அறைக்கு கிழக்கே ஆவணஙகள் வைப்பறையில் இரண்டு நபர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அலுவலகத்தின் அனைத்து அறைகளுக்கும் காவலர்களை அனுப்பி பாதுகாப்புக்காக நிற்கச் செய்யப்பட்டது. சார்பதிவாளர் மற்றும் அங்கு பணியாற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் வந்திருக்கும் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணப்புபிரிவு பார்டியினரையும், திடீர் சோதனை செய்ய வந்த விபரத்தையும் கூறி சோதனை தொடங்கப்பட்டது. சார்பதிவாளர் பெயரை கேட்க அவர் தன் பெயர் திரு.லிங்கேஸ்வரன், சார்பதிவாளர் (மாவட்ட பதிவாளர் நிலை) என்று சொன்னார். மேலே கூறப்பட்ட சார்பதிவாளர் அறை, கணிப்பொறிஅறை, ஆவண வைப்பு அறை மற்றும் பொது மக்கள் காத்திருப்பு ஹாலில் இருந்தவர்களை விசாரித்து அவர்களில் பதிவுக்கு வந்திருந்த பொதுமக்களை மட்டும் விசாரித்து அவர்களை வெளியில் சென்று காத்திருக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. பத்திர பதிவுக்கு தொடர்பில்லாத, சார்பதிவாளர் அலுவலகத்திற்குள்ளே வருவதற்கு வேறு எந்த காரணமும் இல்லாத 6 தனிநபர்கள்/இடைத்தரகர்களை ஆய்வுக்குழு அலுவலர், அவர்களின் பெயர் முகவரி கேட்டு விசாரிக்க, அவர்கள் சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் வந்ததற்காக சொன்ன காரணம் ஆய்வுக்குழு துணை அலுவலருக்கு திருப்திகரமாக இல்லாததால் அவர்களை காவலர்கள் உதவியுடன் சோதனை செய்ய ஒவ்வொரு நபரிடமும் கீழே கண்டவாறு கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணமும், தனியாக சொந்தப்பணமும் வைத்திருந்தது தெரியவந்தது. அதன் விபரம்

| வ. எண் | தனிநபர்/இடைத்தரகர்கள் பெயர், முகவரி | கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணமும் வைத்திருந்த இடமும் | சொந்தப்பணம் வைத்திருந்த இடம் |
|---|---|---|---|
| 1 | திரு.அ.ஐய்யப்பன், வயது.24/19, த/பெ.அண்ணாவி, 2/39, ஆர்ச்சம்பட்டி, குளித்தலை தாலுக்கா, கரூர் மாவட்டம் | ரூ.34,000/– பேண்டின் வலது வெளிப்புற பாக்கெட் | ரூ.240/– சட்டையின் மேல் உட்புற இடது பாக்கெட் |
| 2 | திரு.ரா.விக்னேஷ், வயது.27/19, த/பெ.ராஜா, 5/17, வெள்ளாளர் தெரு, முத்தரசநல்லூர், திருச்சி மாவட்டம். | ரூ.18,000/– பேண்டின் இடது புற சைடு பாக்கெட் | ரூ.380/– சட்டையின் மேல் வெளிப்புற இடது பாக்கெட் |
| 3 | திரு.வே.விக்னேஷ், வயது.21/19, த/பெ.வேணுகோபால், 40/5, கீழபடையாச்சி தெரு, பாலக்கரை, திருச்சி. | ரூ.8,000/– பேண்டின் வலதுபுற சைடு பாக்கெட் | ரூ.380/– சட்டையின் மேல் வெளிப்புற இடது பாக்கெட் |
| 4 | திரு.கா.ரமேஷ், வயது.40/19, த/பெ.காத்தான், 1/17, அக்ரஹாரம், குழுமணி, திருச்சி மாவட்டம். | ரூ.3,500/– பேண்டின் வலதுபுற சைடு பாக்கெட் | ரூ.200/– சட்டையின் மேல் வெளிப்புற இடது பாக்கெட் |
| 5 | திரு.க.செந்தில்குமார், வயது.43/19, த/பெ.கருப்பையா, மேலத்தெரு, பாதரக்குடி, பூதலூர் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம். | ரூ.3,000/– சட்டையின் மேல் வெளிப்புற இடது பாக்கெட் | ரூ.160/– சட்டையின் மேல் உட்புற இடது பாக்கெட் |
| 6 | திரு.ஜெ.கார்த்தி, வயது.35/19, த/பெ.ஜெகதீசன், 82 ஏ, கீழஅடையவலஞ்சான், ஸ்ரீரங்கம், திருச்சி. | ரூ.7,000/– பேண்டின் வலதுபுற சைடு பாக்கெட் | ரூ.350/– சட்டையின் மேல் வெளிப்புற இடது பாக்கெட் |

மேலே கண்ட வரிசை எண் 1 முதல் 6 நபர்களிடமும் உள்ள சொந்த பணம் தவிர, மற்ற பணம் பற்றி ஆய்வுக்குழு அலுவலர் விசாரிக்க, அவர்கள், தாங்கள் அப்பணைத்தை வைத்திருந்ததற்கான விளக்கம் எதுவும் தெரிவிக்காததால், அந்த பணத்தை பத்திர பதிவு செய்யவரும் பொதுமக்களிடமிருந்து பெற்று சார்பதிவகத்தில் பணிபுரிபவர்களுக்கு கையூட்டாக கொடுக்க வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி மொத்த பணம் ரூ.73,500/–ஐ ஆய்வாளர் திரு.ம.நவநீதகிருஷ்ணன் அவர்களால் இந்த திடீர் சோதனையில் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. மேலே கண்ட 1 முதல் 6 தனிநபர்கள்/ இடைத்தரகர்கள் தனியாக வைத்திருந்த பணத்தை தங்களுடைய செலவுக்காக வைத்திருந்த சொந்தப்பணம் என்று சொன்னதால், அந்த பணத்தை அவரவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. தொடர்ந்து அலுவலகத்தின் அனைத்து அறைகளையும் சோதனை செய்ய சார்பதிவாளர் அமர்ந்திருந்த இருக்கைக்கு பின்புறம் உள்ள ஒரு

பிளாஸ்டிக் குப்பை கூடையில் தனித்தனியாக மடித்து சுருட்டப்பட்ட நிலையில் 500, 100, 50, ரூபாய் நோட்டுக்கள் கிடந்தது. அதை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் ரூ.2,200/— இருந்தது. அவ்வாறு கிடந்த பணத்தை பற்றி யாருக்கு சொந்தமான பணம், யார் அங்கு போட்டது என்று விபரம் கேட்க, அந்த பணத்தை தன்னுடைய பணம் தான் என்று யாரும் கூற முன்வரவில்லை. அலுவலகத்திற்குள்ளே கேட்பாரற்று கிடந்த அந்த பணம் மொத்தம் ரூ.2,200/— ஆய்வாளர் திரு.ம.நவநீதகிருஷ்ணன் அவர்களால் இந்த திடீர் சோதனையின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. அவ்வலுவலகத்தின் கழிவறைக்கு செல்லும் வழியின் வடக்கே உள்ள, இரண்டாவது அறையான அலுவலக பணியாளர்கள் உணவு அருந்தும் அறையிலிருந்த பைகளை ஆய்வு குழு ஆய்வாளர் மூலம் சோதனை செய்தபோது, அரசன் ரியல் எஸ்டேட் என்று எழுதப்பட்ட நீல நிறப்பையில் மடித்து சுருட்டப்பட்ட நிலையில் 2000, 500 ரூபாய் நோட்டுக்கள் இருந்தது அதை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் ரூ.45,000/— இருந்தது. அந்த பணம் இருந்த பையை காட்டி, யாருடையது என்று விசாரிக்க, சார்பதிவாளர் தன்னுடைய பைதான் என்று தெரிவித்தார். அந்த பையிலிருந்த பணம் ரூ.45,000/— பற்றிய விபரம் கேட்க, மேற்படி சார்பதிவாளர் பதில் ஏதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்தார். மேற்படி பணம் ரூ.45,000/— பற்றி எவ்வித முகாந்திரமும் சொல்லாததால், அப்பணம் பத்திர பதிவிற்கு வரும் பொதுமக்களிடமிருந்து, இடைதரகர்கள் மூலம் கையூட்டாக பெற்று வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் அந்தப்பணம் ரூ.45,000/— ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. மேலும், அப்பணம் வைத்திருந்த அரசன் ரியல் எஸ்டேட் என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஜிப்வைத்த நீல நிறப்பையை வழக்கின் மேல் நடவடிக்கைக்காக ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. சார்பதிவாளர் அலுவலகத்தில் இன்று (15.07.2019) பதிவுசெய்யப்பட்ட பத்திரங்களைப் பற்றிய விபரம் சார்பதிவாளரிடம் கேட்க, அவர், கணிணியில் எடுக்கப்பட்ட **"அ" கணக்கு அட்டவணையின்** படி 59 பத்திர பதிவும், ஒரு தீர்வு செய்தல் பதிவும் செய்யப்பட்டுள்ளதற்கான ஆவணம் சரியாக இருந்தது. அ கணக்கு அட்டவணையின் விபாம் கணிணியில் பிரிண்ட் எடுக்கப்பட்டு, அதில் சார்பதிவாளரிடம் உண்மை நகல் சான்று பெற்று, மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், ஆவண எண்.4556/2019, 4561/2019 மற்றும் 4562/2019 ஆகிய பத்திர பதிவுக்கான பதிவு கட்டணத்திற்குரிய மூன்று வரைவோலைகள் சரிபார்க்கப்பட்டு திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், **"பி" கணக்கு** அட்டவணையின் படி தனிமனைப் இருப்பிட பதிவுக்காக 2 மனு பெறப்பட்டு, அதற்கான வெளிச்செல்லுகை கட்டணத்திற்கான இரண்டு வரைவோலைகள் பெறப்பட்டுள்ளது. அதனை சரிபார்த்து இரண்டு வரைவோலைகள் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. **"பி" கணக்கு அட்டவணையின்** விபரம் கணிணியில் பிரிண்ட் எடுக்கப்பட்டு, அதில் சார்பதிவாளரிடம் உண்மை நகல் சான்று பெற்று, மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. **"41" கணக்கு கட்டண** விபரம் சரிபார்க்கப்பட்டு, அதன் அட்டவணையின் விபரம் கணிணியில் பிரிண்ட் எடுக்கப்பட்டு, அதில் சார்பதிவாளரிடம் உண்மை நகல் சான்று பெற்று, மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. **இந்து திருமண கட்டண** விபரம் சரிபார்க்கப்பட்டு, அதன் அட்டவணையின் விபரம் கணிணியில் பிரிண்ட் எடுக்கப்பட்டு, அதில் சார்பதிவாளரிடம் உண்மை நகல் சான்று பெற்று, மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. வில்லங்க நகல் பற்றிய விபரம் அடங்கிய **"டி" கணக்கு** அட்டவணை விபரம் சரிபார்க்கப்பட்டு, அந்த அட்டவணையின் விபரம் கணிணியில் பிரிண்ட் எடுக்கப்பட்டு, அதில் சார்பதிவாளரிடம் உண்மை நகல் சான்று பெற்று, மேல் நடவடிக்கைக்காக

கைப்பற்றப்பட்டது. சப்டிவிஷன் பற்றிய விபரம் அடங்கிய அட்டவணை விபரம் சரிபார்க்கப்பட்டு, அந்த அட்டவணையின் விபரம் கணிணியில் பிரிண்ட் எடுக்கப்பட்டு, அதில் சார்பதிவாளரிடம் உண்மை நகல் சான்று பெற்று, மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. சார்பதிவாளர் எதிரே அமர்ந்திருந்த நபரிடம் அவருடைய பெயர் மற்றும் பதவி கேட்க, தனது பெயர் சிவராஜ் என்றும், தான் புகைப்படம் எடுக்கும் இளநிலை உதவியாளர் என்றும் தெரிவித்தார். அவர் பொறுப்பிலிருந்த, இரும்பு பெட்டியை சோதனை செய்ய, அதில் ரூ.3,200/– பணம் இருந்தது. அதை பற்றி விபரம் கேட்க, அந்த பண இன்றைய கொடி நாள் வசூல் என்று தெரிவித்து, முறையே 500, 1000 ரூபாய்க்கான இரண்டு கொடி நாள் வசூல் புத்தகத்தை காண்பித்தார். மேற்படி 500 ரூபாய் கொடி நாள் புத்தகத்தில் இன்றைய தேதியிட்டு (15.07.2019) கொடி நாள் வசூலாக ரூ.1,500/– மட்டும் இருந்தது. மேற்படி பணம் ரூ.1,500/–ஐ ரசீதுடன் ஒப்பிட்டுப் பார்த்து, அரசு கணக்கில் செலுத்த அறிவுறுத்தி, அப்பணம் ரூ.1,500/–ஐ இளநிலை உதவியாளர் திரு.சிவராஜிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் 1000 ரூபாய் கொடி நாள் வசூல் புத்தகத்தில் இன்றைய வசூல் செய்யப்பட்ட பதிவுகள் எதுவும் இல்லை. மேலும், அதிகமாக இருந்த ரூ.1,700/– பற்றி விபரம் திரு.சிவராஜிடம் கேட்க, அவர் எந்தவித விளக்கமும் சொல்லாமல் மௌனமாக இருந்தார். மேற்படி பணம் ரூ.1,700/– பத்திர பதிவிற்கு வந்த பொது மக்கள் மற்றும் இடைத்தரகர்களிடமிருந்து கையூட்டாக பெற்றிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ரூ.1,700/– மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், 500 ரூபாய்கான கொடி நாள் புத்தகம் வரிசை எண்.860551 முதல் 860600 வரையான ரசீதுகளில் 860594 வரை ரசீதுகள் வழங்கப்பட்டு, அதன் அடிக்கட்டை மட்டும் முறையாக எழுதப்படாமல் இருந்தது பற்றியும், 1000 ரூபாய்கான கொடி நாள் புத்தகம் வரிசை எண்.0103001 முதல் 0103025 வரையான ரசீதுகளில் 0103016 வரை ரசீதுகள் வழங்கப்பட்டு, அதன் அடிக்கட்டை மட்டும் முறையாக எழுதப்படாமல் இருந்தது பற்றியும், சார்பதிவாளர் திரு.லிங்கேஸ்வரனிடம் விபரம் கேட்க, அவர் எவ்வித விளக்கமும் சொல்லாமல் மவுனமாக இருந்தார். மேற்படி கொடிநாள் வசூல் ரசீது புத்தகங்கள் இரண்டும் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. சார்பதிவாளர் முதற்கொண்டு அலுவலகத்தில் உள்ள மற்ற அனைத்து நிரந்தர மற்றும் தற்காலிக பணியாளர்களில், பெண் பணியாளர்களை பெண் காவலர்கள் மூலமும் மற்றவர்களை ஆண்காவலர்கள் மூலமும் சோதனை செய்து பார்க்க அவர்கள் சொந்த செலவிற்காக வைத்திருந்த சொற்ப தொகைகளை தவிர வேறு பணம் எதுவும் இல்லை. ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சார்பதிவாளர், உறையூர் சார்பதிவாளர் அலுவலக வருகைப்பதிவேட்டை ஆஜர் செய்தார். அப்பதிவேட்டில் ஜனவரி 2019 முதல் ஜூலை 2019 வரை பதிவுகள் உள்ள பதிவேடும், மேலும் உறையூர் சார்பதிவாளர் அலுவலக தனிநபர் பணம் இருப்பு பதிவேடு 02.01.2019 முதல் 15.07.2019 வரை பதிவுகள் உள்ள பதிவேடும், திடீர் சோதனையின் மேல்நடவடிக்கைக்காக ஆய்வாளர் திரு.ம.நவநீதகிருஷ்ணன் அவர்களால் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறை இரவு 22.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

மேற்படி வேண்டுகோள் கடிதம் உடன் கூடிய திடீர் சோதனை கண்டுள்ள எதிரிகள் 1)த.லிங்கேஸ்வரன், சார்பதிவாளர், உறையூர் சார்வதிகம், திருச்சி 2)ம.சிவராசு, இளநிலை உதவியாளர், உறையூர் சார்வதிகம், திருச்சி மற்றும் தனிநபர்கள் 3)அ.ஐயப்பன், 4)ரா.விக்னேஷ், 5)வே.விக்னேஷ், 6)கா.ரமேஷ், 7)க.செந்தில்குமார் மற்றும் 8)ஜெ.கார்த்தி ஆகியோர் மீது திருச்சி ஊழல் தடுப்பு மற்றும்

கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 08/2019 ச/பி 102 Cr.P.C & 7, 7(A) of Prevention of Corruption (Amendment) Act 2018 ன்படி வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும் திருச்சி மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.பெ.பாலு அவர்கள் கொடுத்த 17.07.2019 தேதியிட்ட கடிதம் மற்றும் 15.07.2019 தேதியில் தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறை(மகஜர்) ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இதர நகல்களை சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை கோப்பில் வைக்கப்பட்டது.